Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 38 /2023 Date: 15.05.2024
Deposition of witness for prosecution: PW1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ரிமஸ் ஜஸ்டின் | Caste | |
| Father/ Name | அந்தோனியார் | Calling | பெயிண்டர் |
| Village | உத்தமபாளையம் | Religion | கிருஷ்டியன் |
| Taluk | உத்தமபாளையம் | Age | 33 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 15.05.2024 TIME 1.44 **pm**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) கடந்த 03.10.2022ம் தேதிஇரவு 8.00 மணியளவில் பாளையம் அரசு மருத்துவமனை முன்பு எனது தகப்பனார் அந்தோனியார் என்னை பார்த்து அனுமந்தன்பட்டி போவதாக கூறினார். அதன் பின்னர் சுமார் 9.15 மணியளவில் எனது தகப்பனார் போனிலிருந்து குமார் என்பவர் பேசி பிடிஆர் காலனி அருகே விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார். எனது அண்ணனுக்கு தகவல் சொல்லி அவர் ஆட்டோ மூலமாக அரசு மருத்துவமனையில் சேர்த்தார். பின்னர் மேல் சிகிச்சைக்காக க.விலக்கு மருத்துவமனைக்கு எனது அம்மா, அக்கா உடன் சென்றார்கள். நான் உத்தமபாளையம் காவல் நிலையத்தில் இரவு 10.00 மணியளவில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாளையத்திலிருந்து கம்பம் செல்லும் அரசு பேருந்து நடந்து சென்ற எனது அப்பா மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார்கள். விபத்து ஏற்படுத்திய பேருந்தை ஓட்டிய நபர் சீனிவாசன் ஆவார். க.விலக்கு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

/ஒம்/ A. இராமநாதன் B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53

(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 38 /2023 Date: 15.05.2024
Deposition of witness for prosecution: PW2 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. குமார் | Caste | |
| Father/ Name | ஆரோக்கியம் | Calling | கூலி |
| Village | உத்தமபாளையம் | Religion | கிருஷ்டியன் |
| Taluk | உத்தமபாளையம் | Age | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 15.05.2024 TIME 1.51 **pm**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) கடந்த 03.10.2022 ம் தேதி இரவு 9.15 மணியளவில் நானும், எனது நண்பர் சபரியப்பன் பிடிஆர் காலனியில் உள்ள சிலுவை கோவில் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்த போது, காயம்பட்ட அந்தோனியார் தெற்கிலிருந்து வடக்காக நடந்து சென்று கொண்டிருந்த போது, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த அரசு பேருந்து வேகமாக வந்து அவர் மீது மோதிவிட்டது. சத்தம் கேட்டு, நாங்கள் சென்று பார்த்த போது, அவரது செல்போனை எடுத்து அவர் மகனுக்கு போன் செய்து தகவல் சொன்னோம். பின்னர் அவரை ஆட்டோ மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்து ஏற்படுத்திய பேருந்து எண் டிஎன் 57 2203 ஆகும் அதை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். அவர் பெயர் சீனிவாசன் ஆகும். அதன் பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பாா்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

/ஒம்/ A. இராமநாதன் B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 38 /2023 Date: 15.05.2024
Deposition of witness for prosecution: PW3 ( LW3)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சபரியப்பன் | Caste | |
| Father/ Name | சூசை | Calling | கூலி |
| Village | உத்தமபாளையம் | Religion | கிருஷ்டியன் |
| Taluk | உத்தமபாளையம் | Age | 32 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 15.05.2024 TIME 1.56 **pm**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) அ.சா2 எனது நண்பர் ஆவார். கடந்த 03.10.2022ம் தேதி இரவு 9.15 மணியளவில் நானும், எனது நண்பர் குமாரும் பிடிஆர் காலனியில் உள்ள சிலுவை கோவில் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்த போது, காயம்பட்ட அந்தோனியார் தெற்கிலிருந்து வடக்காக நடந்து சென்று கொண்டிருந்த போது, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த அரசு பேருந்து வேகமாக வந்து அவர் மீது மோதிவிட்டது. சத்தம் கேட்டு, நாங்கள் சென்று பார்த்த போது, அவரது செல்போனை எடுத்து எனது நண்பர் குமார் அவர் மகனுக்கு போன் செய்து தகவல் சொன்னோம். பின்னர் அவரை ஆட்டோ மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்து ஏற்படுத்திய பேருந்து எண் டிஎன் 57 2203 ஆகும் அதை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். அவர் பெயர் சீனிவாசன் ஆகும். காயம்பட்ட நபர் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

/ஒம்/ A. இராமநாதன் B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 38 /2023 Date: 15.05.2024
Deposition of witness for prosecution: PW4 ( LW4)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ரீகன் | Caste | |
| Father/ Name | அந்தோனியார் | Calling | டிரைவர் |
| Village | உத்தமபாளையம் | Religion | கிருஷ்டியன் |
| Taluk | உத்தமபாளையம் | Age | 29 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 15.05.2024 TIME 1.59 **pm**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) அ.சா1 எனது தம்பி ஆவார். கடந்த 03.10.2022 ம் தேதி இரவு 9.15 மணியளவில் எனது தகப்பனாருக்கு பிடிஆர் காலனி அருகே விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார். நான் சென்று பார்த்த போது மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். அந்த இடத்தில் ஓட்டுநர் ஆஜர் எதிரி இருந்தார். அதன் பிறகு உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக க.விலக்கு மருத்துவமனைக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பாா்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

/ஒம்/ A. இராமநாதன் B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 38 /2023 Date: 15.05.2024
Deposition of witness for prosecution: PW5 ( LW6)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. இன்னாசு | Caste | |
| Father/ Name | ஆரோக்கியம் | Calling | கூலி |
| Village | உத்தமபாளையம் | Religion | கிருஷ்டியன் |
| Taluk | உத்தமபாளையம் | Age | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 15.05.2024 TIME 02.04 **pm**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது எரசக்கநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 03.10.22ம் தேதி இரவு 11.00 மணிக்கு உத்தமபாளையம் பிடிஆர் காலனி அருகில் நானும், சுரேஷ்குமாரும் என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்த போது அங்கே வந்த உத்தமபாளையம் போலிசார் விபத்து வழக்கு சம்பந்தமாக விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். நேரில் வந்த விசாரணை செய்ததற்கு சாட்சியாக என்னிடமும், சுரேஷ்குமார் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் பார்வை மகஜரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது **அசாஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) சம்பவம் நடந்த இடத்தில் எனக்கு வீடு, கடை ஏதும் இல்லை. நான் பணிசெய்யும் இடம் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் விபத்து நடந்ததாக இருந்தது. என்ன வழக்கு எண், பிரிவு தெரியாது என்றால் சரிதான். எந்த போலிசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் பெயர் தெரியாது. விபத்து நடந்த இடத்தில் வீடுகளும், கடைகளும் உள்ளது என்றால் சரிதான். ஏடிஎம் இரவு காவலாளி இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், இறந்த நபரும் உறவினர்கள் என்றால் சரியல்ல. ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

/ஒம்/ A. இராமநாதன் B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.